## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் - 2017

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை மாற்றங்கள் கூற்று , காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 29 ஆம் இலக்க உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும் . அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக சட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களை பயன்படுத்துவதற்காக தயாரான நிலைக்கு ஆக்கப்பட்ட தினத்தை அடிப்படையாக கொண்டு பெறுமானத் தேய்வு கழித்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக மீளய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 168,255,533 தொகை பெறுமதியான மூன்று கட்டிடங்களுக்காக நிர்மாண வேலை ஒப்பந்த வேலையின் இறுதி கொடுப்பனவு செய்யப்பட்ட தினத்தை அடிப்படையாக கொண்டு பெறுமானத் தேய்வு கழித்தல் கணிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 2,298,707 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டு நிதியங்களை செலவிடப்பட்டு கொல்வனவு செய்திருந்த ரூபா 639,266 தொகை பெறுமதியான சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு ஆக்கப்பட்ட சந்தர்பத்தில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என மூலதனப்படுத்துவதற்கு பதிலாக தடுத்து வைத்தல் பணம் திருப்பி செலுத்தியிருந்த சந்தர்ப்பத்தில் மூலதனப்படுத்தியிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆண்டின் போது கொல்வனவு செய்திருந்த ரூபா 18,000,000 கிரயத்தையுடைய 02 வாகனங்கள் கிரயத்தை மிகைத்து ரூபா 340,603 தொகை பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருவாய்ச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய வாகன திருத்த வேலைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 335,545 தொகை மோட்டார் வாகன கிரயத்தின் கீழ் மூலதனப்படுத்தியிருந்தது.

(இ) தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2015 ஆண்டின் போது தகவல் தொழில்நுட்ப அமைச்சுக்கு வழங்கியிருந்த ரூபா 46.1 மில்லியன் மற்றும் அந்த நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்திற்கு வழங்கியிருந்த ரூபா 9.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டு அம்பாறை உயர்தொழில் நுட்பவியல் கல்வி நிருவகத்தில் நிர்மாணித்திருத்த விரிவுரை மண்டபத்திற்கான நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 9.4 மில்லியனுக்கு பெறுமதியை மாத்திரம் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருந்த போதிலும் அமைச்சிலிருந்த செலவிடப்பட ரூபா 46.1 மில்லியன் பெறுமதி மீளாய்வாண்டு இறுதிவரையும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) பல வருட கால முதல் 05 செயற்திட்டங்கள் முலம் நன்கொடையாக நிறுவகத்திற்கு வழங்கியிருந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு முடிவுற்றிருந்த போதும் நன்கொடையின் பெறுமதியாகிய ரூபா983,193,091 தொகை இதுவரை முறையாக அடிப்படை ஒன்றின் கீழ் பிற்போடப்பட்ட வருமானம் என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2013 மற்றும் 2015 ஆண்டுகளின் போது அம்பாறை மற்றும் மட்டக்குளி உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த முறையே ரூபா 333,697 தொகை மற்றும் ரூபா 30,000 தொகையான முற்பண மீதிகள் இந்த அறிக்கை திகதிவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் சேவையை விட்டு விலகி சென்றிருந்த 09 பேரின் இடர் கடன் மீதி முன் அறிவிப்பு இன்றி சேவையை விட்டு சென்ற காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய மீதி, உடன்படிக்கைகளை மீறிய காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய மீதி என்ற வகையில் நிறுவகத்திற்கு அவிடப்பட வேண்டிய மீதி மற்றும் ஒப்படைக்கப்படாத புத்தகங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,279.318 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1995 இன் 29 ஆம் இலக்க இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகச் சட்டத்தின் 21 (க) பிரிவு | உயர் தொழிலநுட்பவியல் நிறவகத்திற்கு கிடைக்கும் மானியங்கள் மற்றும் நிறுவனத்தினால் உழைக்கப்படும் ஏதேனும் வருமானம் ஒன்று செலவு வைப்பதற்காக நிதியம் ஒன்று பேணுவதற்காக ஒவ்வொரு உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனங்களுக்கும் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் நாயக்கத்தினால் 2016 மார்ச் 03 ஆம் திகதி SLIATE/CT/2016 இலக்கம் கொண்ட கடிதத்தின் முலம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தினால் உழைக்கு வருமானம் தலைமை அலுவலகத்தில் சேமிப்புக் கணக்கில் வைப்பு செய்யும்படி அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 திகதி 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | நிறுவகத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பாக அனைத்து எரிபொருள் பரிசோதனைக்கு பின்னரும் 12 மாத காலத்தின் பின்னர் மீண்டும் எரிபெருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (இ) 1978 திசெம்பர் 19 திகதி 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரிவு 2.1 | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டுமெனினும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறவகத்தின் தலைமை அலுவலகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 பெறுகை வழிகாட்டல் கோவை | |
| பிரிவுகள் 4.3.1(அ) மற்றும் 4.3.2 | பெறுகை ஒப்பந்த வேலைகளுக்காக அதனை சார்ந்த செலவுகள் உட்பட மொத்த கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்து உரிய அதிகாரத்தின் கீழ் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமெனினும் மட்டக்குளி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக்தின் விடுதிக்கு தளபாடங்கள் உபகரணங்கள் கொல்வனவு செய்வதற்காக ரூபா 17,552,220 தொகைக்கான பெறுகை ஒப்பந்த வேலை தொடர்பாக அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |
| பிரிவு 8.9.1(அ) | விலைமனு தாரரினால் சமர்பிக்கப்பட்டிருந்த விலைமனு ஏற்ற பின்னர் முறையான ஏற்றல் கடிதம் ஒன்று வழங்குவதுடன் பண்டம் வழங்கல் ஒப்பந்த வேலையின் கருமுறையான உடன்படிக்கை ஒன்று கையொப்பம் இடப்பட வேண்டுமெனினும் பின்வரும் பெறுகைகளுக்காக அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. |

i. மட்டக்குளி உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் புதிய விடுதிக்காக 2017 ஆண்டின் போது ரூபா 11,265,670 தொகை பெறுமதியான வாசிப்பு மேசைகள் மற்றும் பங்கர் கட்டில்கள் வழங்குதல்.
ii. 2017/2018 ஆண்டிற்கான தலைமை அலுவலகம் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் 06 பிரிவுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 10,187,040 தொகைக்கான 07 சுத்தீகரிப்பு சேவை உடன்படிக்கைகள் வழங்குதல்.

| | |
|---|---|
| பிரிவுகள் 8.12.3(அ),(ஆ) மற்றும் (இ) | அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் பண்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா ஒப்பந்த வேலை ஏற்பாடுகளுக்கு இணங்க உள்ளனவா நிலைய பொறுப்பு உத்தியோகத்தர்களினால் பண்டங்களை பரிசோதனை செய்து சான்றுபடுத்த வேண்டும் எனினும் மட்டக்குளி உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்காக கொல்வனவு செய்திருந்த 181 வாசிப்பு மேசைகள் ,183 பங்கர் கட்டில்கள், 378 வாசிப்பு கதிரைகள் அவ்வாறான சான்றுபடுத்தல் இன்றி பெறப்பட்டுள்ளது. |
| பிரிவு 5.2.1 (அ) | விலைமனு அழைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் விலைமனுதாரர் ஒருவருக்கு தேவையான அனைத்து தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டியதுடன் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் தலைமை அவலுவலக மற்றும் நிறுவகத்தின் 06 பிரிவுகளுக்காக சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்கு தொடர்பான விலைமனு அழைப்பு ஆவணங்களில் ஒரு மாதத்தில் சுத்திகரிப்பு சேவை வழங்கப்படுகின்ற நிச்சயிக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை குறிப்பிட்டிருக்கவில்லை. |
| பிரிவு 2.8.4 | உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நிறுவனத்தின் 06 பிரிவுகளில் 2016/2017 ஆண்டுகளுக்காக சுத்திகரிப்பு சேவை வழங்குவது தொடர்பாக விலைமனு மதிப்பாய்வு செய்தல் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்றின் நியமனம் செய்ததற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த அண்டின் போது நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 61,378,666 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 81,198,533 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 19,819,867 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. ஆண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 103,824,727 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஆளுக்குரிய சம்பள செலவுகள் ரூபா 41,409,884 இனால் மற்றும் உடன்பட்ட சேவை செலவுகள் ரூபா 34,355,724 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகயுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆண்டின் போது நிதி பற்றாக்குறையில் அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆண்டின் போது நிதி மிகை ஒன்று ஏற்பட்டிருந்தது. 2016 ஆண்டின் போது நிதி அதிகரிப்பில் கிரமமான அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டிருந்ததுடன் மீண்டும் மீளாய்வாண்டின் போது அந்த நிதி மிகையில் வீழ்ச்சி ஒன்று அவானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 611,058,511 தொகைக்கான பங்களிப்பு 2017 ஆண்டு இறுதி அளவில் ரூபா 1,034.838,550 தொகை வரை அதாவது 69 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றுகை

2013 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது பாடநெறிகளுக்காக சேர்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 8,264 தொகை அதாவது 159 சதவீத அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதே போல 2017 ஆண்டின் போது சேர்ப்பதற்காக திட்டமிட்டிருந்த எண்ணிக்கை விட அவ்வாண்டின் போது உண்மையாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 5,336 தொகை அதாவது 66 சதவீத அதிகரிப்பு ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 4.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

மட்டக்குளி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்திற்கு 2011 ஆண்டின் போது ஜெம்கோ (JEMCO) செயற்திட்டத்தின் மூலம் மாணவர்களின் செய்முறை பயிற்சி வேலைத்தளத் (Work Shop) திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 58 வேலைத்தள உபகரணங்கள் விடயங்கள் 05 வருடங்களை விட மிகையான காலம் அந்த நிறுவகத்தில் கலஞ்சியமொன்றில் எதுவித பயிற்சி வழங்கல் நடவடிக்கைக்குப் பயனபடுத்தப்படாமல தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 4.3 முறைப் பிரகாரம் உரித்தாக்கப்படாத காணிகள் மற்றும் ஆதனங்களில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்திற்காக நான்கு மாடி கட்டிடமொன்று நிறுவுவதற்காக நிறுவகத்தினால் 2016 அக்தோபர் 12 ஆம் திகதி ரூபா 166,614,856 (வரி இன்றி ) பெறுமதி ஒன்றிற்கு தனியார் நிர்மாண வேலை ஒப்பந்த கம்பனி ஒன்றுடன் ஒப்பந்த வேலை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) இந்த நிர்மாண வேலை ஒப்பந்த வேலைக்காக 2016 நவம்பர் 10 திகதி ரூபா 36,988,498 இற்கு வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் ஒன்று ஒப்பந்தகாரருக்கு வழங்கியிருந்த பின்னர் ஒப்பந்தகாரரினால் ரூபா 19,389,905 இற்கு பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்கான சிட்டைகள் சமர்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் குறிப்பிட்ட கட்டிடம் நிர்மானிக்கப்படும் காணி வேறு தனிப்பட்ட உரிமையாளர் ஒருவருக்கு உரித்தானது என காணி உரித்தான ஆவனங்களை சமர்பித்து தனியார் தரப்பினர்களினால் யாழ்பாண மாவட்ட நீதி மன்றத்திற்கு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2017 மார்ச் 09 திகதி முதல் யாழ்பாண மாவட்ட நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட காணியில் உட்புகுவதை நீதிமன்றத்தினால் தடைசெய்திருந்தமையால் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு செலுத்தியிருந்த தொகை பயனற்ற செலவு ஒன்று என அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவனகத்தினால் காணியின் உரிமையை தீர்க்கப்படாமல் நிர்மான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன என கட்டிடம் நிர்மாணிப்பதற்கான எதிர்பார்த்த குறிக்கோளை நெருங்குவதற்கு முடியாதிருந்தது.

**4.4 செயற்பாட்டு தொழிற்பாடுகள்**

மட்டக்குளி உயர்தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கு இணையதள வசதிகள் வழங்குவதற்காக Lanka Education and Research Network (LEARN) நிறுவனத்தின் உதவியை பெற்றக்கொள்ளல் தொடர்பக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆய்வு அலுவல்கள் மற்றும் கல்வி அலுவல்கள் மேற்கொள்ளும் நோக்குடன் இந்த LEARN தொடர்பினை ஏற்படுத்தி இருந்த போதிலும் மாணவர்களுக்கு மற்றும் கல்வி பதவியனியனருக்கு அவர்களின் விரிவுரைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக இணையத்தில் நுழையும் போது இந்த தொடர்பாக மந்த கதியானது இருப்பது பாதிப்பக இருந்ததுஇதன் காரணமாக LEARN தொடர்புக்கு மேலதிகமாக வேறு தொடர்பு ஒன்றினை பெற்றுத்தருமாறு கல்வி பதவியனியின் அங்கத்தவர்களினால் மேற்கொண்டிருந்த கோரிக்கை பிரகாரம் நிறுவனத்தினால் பயன்படுத்திய தொலைபேசியை தொடர்புபடுத்தி மேலதிக இணைய வசதிகள் பெறப்பட்டிருந்தது.

(ஆ) இவ்வாறு ஒட்டு மொத்த நிறுவனத்தினது அலுவல்களுக்காக பயன்படுத்தும் சிரி லங்கா டெலிகொம் நிறுவனத்தில் இருந்து பெற்றிருந்த 03 தொலைபேசி தொடர்புகளுக்காக தொலைபேசி செலவுகள் உட்பட இணைய வசதிகளுக்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை ரூபா 60,000 இற்கு அண்மித்த தொகையாக இருந்த போதிலும் LEARN தொடர்பிற்காக 2017 ஆண்டின் போது மாதாந்தம் ரூபா 121,760 தொகை வீதம் மேற்கூறிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இந்த LEARN தொடர்பிற்காக 2015 ஏப்ரல் முதல் 2017 திசெம்பர் வரை ரூபா 3,962,988 தொகை செலுத்தியிருந்த போதிலும் LEARN தொடர்பாக மந்தப் போக்கில் காணப்பட்டதால் மேலதிக தொகை ஒன்று செலவிடப்பட்டு டெலிகோம் நிறுவனத்தின் இணைய வசதிகள் பெறப்பட்டிருந்தன.

**4.5 சர்ச்சைக்குரிய தன்மையிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016/2017 ஆண்டின் தெஹிவெல மற்றும் மட்டக்களப்பு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் சுத்திகரிப்பு சேவை வழங்குவதற்காக தனியர் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,016,408 தொகைக்காக நிறுவனத்தினால் எழுதியிருந்த 07 காசோலைகள் எதுவித அதிகாரம் சாட்டப்பட்ட கடிதமும் இன்றி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெறப்பட்டிருந்தது.

(ஆ) உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் மற்றும் நிறுவகத்தின் 06 பிரிவுகளுக்காக சுத்திகரிப்பு சேவை வழங்கியிருந்த நிறுவனத்தின் பேரில் வேறு சுத்திகரப்பு நிறுவனம் ஒன்று போலியான முறையில் பதிவு செய்து அவ்வாறு போலியான முறையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக அரச வங்கியொன்றில் சேமிப்பு கணக்கொன்று திறக்கப்பட்டிருந்தது. அவ்வாறு திறக்கப்பட்டிருந்த சேமிப்பு கணக்கில் பணிப்பாளர் நாயகத்தினால் பெற்றிருந்த காசோலைகள் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) தெஹிவெல உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் 2017/2018 ஆண்டுகளுக்கான சுத்திகரிப்பு அலுவல்கள் தொடர்பாக கடந்த ஆண்டில் சேவை வழங்கிய நிறுவனம் தகைமை பெற்றிருந்ததுடன் அத தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அந்த கம்பனியை நிறுவகத்தினால் நிறுவகத்திற்கு சமர்பித்திருந்த வியாபாரப் பதிவுச் சான்றிதழ் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்தின் தொடர்புடைய சான்றிதழ் என்பன போலி ஆவணங்கள் என உறுதியாகியது.

## 4.6 பதவியணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 758 தொகை எனினும் உள்ளவாறு பதவியனியினர் 627 ஆக காணப்பட்டதால் 131 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில் சிரேஷ்ட, மூன்றாம் தர மற்றும் கல்வி மட்டத்தில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 10 தொகை, 43 தொகை மற்றும் 29 தொகையாக இருந்தன.

(ஆ) சிரேஷ்ட மட்டத்தை சேர்ந்த வெற்றிடங்களில் பணிப்பாளர், கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு இறதிவரையும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் நிதி நிருவாக மற்றும் கல்வி அலுவல்கள் தொடர்பான கருமங்களை குறிப்பிட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நோக்கி செயற்படுத்தும் போது இந்த சிரேஷ்ட, மூன்றாம் தர மற்றும் கல்வி மட்டத்தை சேர்ந்த பதவிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானவை எனினும் அவற்றின் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என மேற்கூறிய பதவி வெற்றிடங்களின் பிரகாரம் அவானிக்கப்பட்டது.

# 5 நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளய்வாண்டிற்கான இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருந்தது அவ்வாறாயினும் இனங்கண்டிருந்த அதன் நோக்கெல்லையின் கீழ்வரும் குறிக்கோள்களின் செயலாற்றுகளை அளவீடு செய்வதற்காக சரியான தரவு முறைமை ஒன்று காணப்படல் கட்டாயமாகக் காணப்பட்ட போதிலும் நிறுவகத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்று உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானகிக்கப்பட்டது.

## 6 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கபட வேண்டுமெனினும் அவ்வாறு உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் பெறுகைகள் செயற்படு முறையை குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் அந்த குறைபடுகள் கண்டறிவதற்காக நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வு பகுதியினால் போதியளவு கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவானிக்கப்பட்டது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செய்முறைகள்

#### 6.2.1 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கெள்ளப்படுகின்றன.

(அ) காலி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் வேலைத்தளம் (WORK SHOP ) இற்கு ஆய்வுகூட உபகரணங்கள் பொருத்துவதற்கான ரூபா 49,024,612 தொகை பெறுமதியான பெறுகை ஒன்றிற்காக வழங்குனருடன் 2017 திசெம்பர் 18 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட உபகரணங்களை வழங்கி பொருத்தி முடிக்க வேண்டியிருந்தது அவ்வாறாயினும் இவ் அறிக்கை திகதி அளவிலும் குறிப்பிட்ட பொருத்துதல் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதேபோல இந்த பெறுகை தொடர்பாக ரூபா 9,804,922 இற்கான முற்பணத் தொகையொன்று செலுத்தியிருந்ததுடன் முற்பண பிணைமுறியின் காலம் 2018 ஜனவரி 31 திகதி முடிவடந்திருந்தது. எனினும் சிட்டையின் முலம் அந்த தொகையை அறவீடு செய்வதற்காக அல்லது பிணை முறியின் காலத்தை நீடித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மட்டக்குளி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் வளவில் சேகரமாகும் மழைநீர் இறங்கி செல்வதற்காக கழிவு நீர் சேகரிக்கும் தொட்டி (Septic Tank) நிர்மணிக்கும் ஒப்பந்த வேலைக்காக ரூபா 3,800,500 தொகை பெறுமதி ஒன்றிற்கு 2017 ஜுலை 14 திகதி ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. விலைமனு அழைப்பு 2016 திசெம்பர் 02 திகதி மேற்கொள்ளப்பட்டிருந் போதிலும் விலைமனு வழங்குதல் மற்றும் உடன்படிக்கை கையொப்பம் 07 மாதங்களை அண்மித்த காலம் தாமதமாகியிருந்தது.

ii. நிர்மாண வேலை ஒப்பந்த வேலை தொடர்பாக ரூபா 3,821,000 தொகை பெறுமதியான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக கணிப்புச் சிட்டை தயாரித்திருக்காமையால் நிர்மான வேலைகளுக்கான கருமங்களை பூர்த்தி செய்ய வேண்டிய முறை மற்றும் மதிப்பீட்டு கூறுவிலை தீர்மானிக்கப்பட்டிருந்த முறை தொடர்பாக கணக்காய்வு அலுவல்கள் செய்தல் சிக்கல் நிலையில் இருந்தது.

(இ) மட்டக்குளி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் புதிய விடுதிக்குத் தேவையான 190 உருக்கு அலுமாரிகள், 190 வாசிப்பு மேசைகள், 380 வாசிப்பு கதிரைகள், 190 பங்கர் கட்டில்கள் மற்றும் 380 மெத்தைகள் கொள்வனவு செய்தல் தொடர்பான பெருகை அலுவல்களின் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. பங்கர் கட்டில்கள் வழங்குனரினால் ஒரு கட்டில் ரூபா 35,493 தொகைக்கான விலையின் பிரகாரம் ரூபா 6,388.740 தொகை பெறுமதியான 180 கட்டில்கள் 2018 ஜனவரி 10 திகதி வழங்கியிருந்ததுடன் அவை மாதிரிகளுக்கு மற்றும் வரைபுகளுக்கு ஏற்ப உரிய நியமங்களின் பிரகாரம் பூர்த்தி செய்திருக்கவில்லை என 2018 மார்ச் 20 திகதி மேற்கொள்ளபட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

ii. பங்கர் கட்டில்களில் வரைபுகளின் பிரகாரம் மேல் கட்டிலின் பகுதி SCH 40,1.00 DIA அளவான குழாய்கள் பயன்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்விடயங்கள் அனைத்து L Angel பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதே போல் அந்த கட்டிலின் மேல் கட்டிலின் இடது மற்றும் வலது பகுதிகளின் பாதுகாப்பு வேலி (Hand rest) கட்டிலின் நீளத்தில் 2/3 பகுதியை மறையக் கூடிய விதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும் குழாய்களுக்கு பதிலாக Flat iron பயன்படுத்தி கட்டிலின் நீளத்தில் 1/3 பகுதி மாத்திரம் மறையும் விதத்தில் பாதுகாப்பு வேலி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக பங்கர் கட்டில்களின் பாதுகாப்பு வேலியின் பலம் குறைந்து இருந்ததுடன் கட்டில்களில் வெட்டக் கூடிய / கீறல் ஏற்படக் கூடிய நிலைமையொன்று காணப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் மாணவர்களினால் புடவை துண்டுகள் சுற்றி பாதுகாப்பு பெற்றுள்ளதுடன் இதன் பிரகரம் சமர்பித்திருந்த மாதிரிகளுக்கு முற்றாக வித்தியாசமான கட்டில்கள் வழங்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

iii. அதே போல வரையின் பிரகாரம் மேல் மற்றும் கீழ் கட்டில்களுக்கு 74×38×0.5 அங்குலங்கள் அளவின் முழு Plywood sheet போடப்பட வேண்டுமெனினும் ஒரு கட்டிலுக்கு 03 அல்லது 04 துண்டுகள் போடப்பட்டு Plywood sheet துண்டுகள் போடப்பட்டிருந்த சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன. பண்டங்களை ஒப்புக் கொள்ளப்பட்டதற்கான ஆவணங்களின் பிரகாரம் பெறு செய்திருந்த 183 கட்டில்களைச் சேர்ந்த 366 மேல் மற்றும் கீழ் கட்டில்களில் 152 உம் பலகை பகுதிகள் போடப்பட்ட கட்டில்கள் என ஆவணங்களை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டது.

iv. வாசிப்பு மேசைகள் வழங்குனரினால் 2018 ஜனவரி 10 ஆம் திகதி ஒன்று ரூபா 23,800 வீதம் ரூபா 4,307,800 தொகை பெறுமதியான 181 வாசிப்பு மேசைகள் வழங்கியிருந்ததுடன் வாசிப்பு மேசையின் பலகை மற்றும் மேசையுடன் தொடர்புடைய பயில் இராக்கைகள் அனைத்தும் 0.75 அங்குலம் கனத்தில் மகோகனி பலகையின் மூலம் பூர்த்தி செய்ய வேண்டுமென விவரக் குறிப்பில் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அனைத்து விடயங்களும் Plywood Sheet களினால் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மற்றும் பொருத்தியிருந்த பயில் இராக்கைகளில் பகுதிகள் வண்டு துளைத்திருந்ததால் தூள்கள் வெளிப்பட்டிருந்ததுடன் கணக்கய்வின் போது அவதானிக்கப்பட்டது.

v. வாசிப்பு கதிரைகள் வழங்குனரினால் 2018 ஜனவரி 10 திகதி ஒன்று ரூபா 5,000 வீதம் ரூபா 1,890,000 பெறுமதியான 378 வாசிப்பு கதிரைகள் வழங்கியிருந்ததுடன் பெறுகை செய்திருந்த கதிரைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த விவரக் குறிப்பின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வடிவிலும் மற்றும் வலுவுடையவாறு பூர்த்தி செய்யாமையால் கதிரைகளில் உட்கார்ந்து கல்வி நடவடிக்கைகள் ஈடுபடும் போது உடம்பிற்கு அசௌகரியம் ஏற்படுவதாகவும் மாணவர்களினால் அளிக்கப்பட்ட விளக்கத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் சொத்துக்கள் இனங்காணாமல் மற்றும் பெறுமானத் தேய்வு கணித்திருக்கவில்லை. |
| (ஆ) | நிதிக் கட்டுபாடு | நிறுவகத்தின் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதி தாமதமின்றி அறவீடு செய்யாமை. |
| (இ) | ஒப்பந்த நிருவாகம் | முறையான ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமை உடன்பட்டுள்ள ஒப்பந்த வேலைகள் தொடர்பாக அதற்கு இணங்க செய்றபடாமை ஒப்பந்த வேலை தாமதங்களை குறைதல் மற்றும் தாமதங்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமை. |
| (ஈ) | பெறுகை கட்டுபாடு | i. விலைகூறல் அழைதல் திறத்தல் விலைகூறல்களை மதிப்பாய்வு செயதல் பெறுகை தீர்மானங்களின் மீது விலைகூறல் வழங்கும் போது பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்படாமை.<br><br>ii. விலை கூறல்கள் மதிப்பாய்வு செய்யும் போது குறிப்பிட்ட விலைகூறல் ஆவணங்களின் பிழையற்ற தன்மை தொடர்பாக குழுவினால் கவனம் செலுத்தாமை<br><br>iii. பெறுகை வழிகாட்டல் கோவையின் அடிப்படை குறிக்கோள்கள் உயர்ந்த பண்புகளை உடைய குறைந்த கிரயத்தை மேற்கொள்ளும் பெறுபேறு என உச்சமட்ட பொருளாதார நலன்களை பெற்றுக் கொள்ளல் உரிய காலத்தில் நேரத்தில் பண்புகள் சார் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ள நிச்சயித்த நியமங்களுக்கு நியமக் குறியீடுகள் சட்டங்கள் விதிகளுக்கு பிரமாணங்களுக்கு இணங்க செயற்படுதல் மதிப்பாய்வு செய்தல் மற்றும் தெரிவு செய்யும் செயல் நடவடிக்கையில் வெளிப்படையாக தன்மை சட்டரீதியான தன்மை சான்றுபடுத்தல்நடைபெற்றிருக்கவில்லை. |
| (உ) | கொடுப்பனவு செய்தல் | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க உறுதிச் சிட்டில் குறிப்பிட்டுள்ள நபரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |